## பருத்திக்கான விலை முன்னறிவிப்பு

உலகின், அதிக பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் முக்கியமான நாடாகும். பருத்தி, நாட்டின் மொத்த நார் பயிர் நுகர்வில் 58 சதவீதம் பங்களிப்பை வழங்குவதன் மூலம் இந்தியாவில் ஜவுளித் தொழிலை நிலை நிறுத்துகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, இந்தியா, மத்திய ஆசியா, பாகிஸ்தான் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் பருத்தி அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் வேளாண் அமைச்சக தகவல் படி, 2018 -19 ஆண்டில் பருத்தி 12.3 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 27 மில்லியன் பேல்கள் (1 பேல் =170 கிலோகிராம்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை உலக பருத்தி உற்பத்தியில் 23.20 சதவீதமாக விளங்குகிறது. நம் நாட்டில், குஜராத், மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஹரியானா, மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பருத்தியை அதிகளவு உற்பத்தி செய்கின்றன.

இந்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் படி, 2018 -19 ஆண்டில் பருத்தியானது சுமார் 1.40 இலட்சம் எக்டர் பரப்பளவில் தமிழ் நாட்டில் பயிரிடப்பட்டு 6.0 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், சேலம், தர்மபுரி, அரியலூர், திருச்சி, விருதுநகர், மதுரை மற்றும் கடலூர்ஆகிய மாவட்டங்களில் பருத்தி அதிகளவு பயிரிடப்படுகின்றது. பருத்தி இறவை முறை மற்றும் மானவாரியாகவும் பயிரிடப்படுகின்றது. தென் மாவட்டங்களில் மானவாரி விதைப்பு அக்டோபர் மாதங்கள் வரை நீட்டிக்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு மற்றும் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 10 ஆண்டுகளாக கொங்கனாபுரம் கூட்டுறவு விற்பனை மையத்தில் நிலவிய பருத்தி விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது.

**விற்பனை முடிவுகள்:**

ஆய்வுகளின் அடிப்படையில், தரமான பருத்தியின் பண்ணை விலை (செப்டம்பர்-அக்டோபர்'19) குவிண்டாலுக்கு ரூ. 5300 முதல் 5400 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**விதைப்பு முடிவுகள்:**

தற்போதைய ஆண்டில் உலக உற்பத்தி அதிகளவு இருப்பதால் இப்பருவத்தில் விதைக்கப்படும் பருத்தியின் விலை அறுடையின் போது குவிண்டாலுக்கு ரூ. 5200 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் :- 0422-2450507